பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
187, ආඩියපාදම් පාර, තිරුනෙල්වෙලි, යාපනය.
187, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

எனது இல: NP/09/FRM/CIR/2014 திகதி: 03.01.2014

மாகாண சுற்றுநிருப இல: **PF/01/2014**

மாகாண செயலாளர்கள்
பிரதிப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
வடமாகாணம்

**அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச்சட்டசபைகள் அரச வங்கிகள் மற்றும் அரசிற்கு சொந்தமான கம்பனிகள் ஆகியவற்றிற்கு பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்**

மேற்படி விடயம் தொடர்பாக நிதி, திட்டமிடல் அமைச்சு செயலாளர் அவர்களது PF/R/3/Security இலக்க 2010.08.12 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின்பால் தங்களது கவனம் கோரப்படுகின்றது.

இந்த சுற்றுநிருபத்திற்கு அமைவாக மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றிற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்றிறன் மிக்க பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1. ஒவ்வொரு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கான காவலாளிகள், சுத்திகரிப்புத் தொழிலாளிகளுக்கான ஆளணி, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஆளணி அனுமதிக்கப்படாதிருக்கும் அலுவலகங்களுக்குத் தேவையான பாதுகாப்பு சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவையைப் பெறுவதற்கான நபர்களின் எண்ணிக்கையை குறித்த திணைக்களத் தலைவர்கள் உரிய நியாயப்படுத்தல்களுடன் தங்களுடைய அமைச்சு மட்டத்திலான குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானக் குறிப்புடன் செயலாளர் குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. செயலாளர் குழுவில் அனைத்து மாகாண நிறுவனங்களுடைய தேவை விபரங்கள் கலந்துரையாடப்பட்டு தேவையான எண்ணிக்கை விபரங்கள் தீர்மானிக்கப்படும்.

3. அரச நிதி சுற்றுநிருபங்கள் மற்றும் பெறுகை நடைமுறைக்களுக்கமைவாக ஒப்பந்த பத்திரம் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகள் தொடர்பான விபரங்கள் செயலாளர் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

4. பெறுகைக்குழு தீர்மானத்தின்படி, சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரினால் மேற்படி சேவைகளுக்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான கொடுப்பனவுகளும் சம்பந்தப்பட்ட அமைச்சினால் வழங்கப்படும். இக்கொடுப்பனவுகளுக்கான நிதி, சம்பந்தப்பட்ட அமைச்சின் பாதீட்டில் ஏற்படுத்திக் கொள்ளப்படுதல் வேண்டும்.

ர.விஜயலட்சுமி

பிரதம செயலாளர்
Chief Secretary
Northern Province

பிரதி:
1. கௌரவ ஆளுநரின் செயலாளர், வ.மா - கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அறியத் தருவதற்காக
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம், வ.மா } தகவலுக்காக
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாரளர், வ.மா } தகவலுக்காக